**அக்டோபர்: 29**

## பிறவிச்சப்பாணி குணமடைந்த அற்புதம்.

### வாசிக்க: அப்போஸ்தலர் 3:1-1

ஜெபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள். அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்துகொண்டுவந்தார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைகேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான். பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து; எங்களை நோக்கிப்பார் என்றார்கள். அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி அவர்களை நோக்கிப்பார்த்தான். அப்பொழுது பேதுரு; வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி, வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான், நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத்தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும் கண்டு; தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சைகேட்க உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்.




நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீஷர்களை விட்டு எடுத்துக் கொண்ட பின்னர் சீஷர்கள் மூலம் நடத்தப்பட்ட முதல் அற்புதம் இது. ஆண்டவர் சரீரத்தில் சீஷர்களுடன் இருந்த காலத்தில் அநேக அற்புதங்களை பார்த்து, ரசித்து ருசித்திருந்தாலும், நமக்கு தெரியும் சிலுவைப்பாதையில் சீஷர்களின் விசுவாச அளவு. ஆனால் இங்கே நடந்த அற்புதத்தை தியானித்தால், எந்த ஒரு நபரும் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றபின், பரிசுத்த ஆவியானவரை தன் வாழ்க்கையை ஆளுகை செய்ய அர்பணித்து விசுவாசத்துடன் பேசுகிற வார்த்தைகள், இயேசப்பா தம் சரீரத்தில் இருந்தபோது சொல்லி செய்ததை போலவே அற்புதங்கள் நடைபெறும். செல்லங்களா உங்க நண்பர்களிடமும், தெரிந்தவர்களிடமும் நீங்களும் விசுவாசத்தோடு முயற்சித்து பார்க்கலாமே. முக்கியமானது, 1) இயேசப்பாவை இரட்சகராக அழைக்கணும் 2)பரிசுத்த ஆவியானவர் ஆளுகை செய்ய அர்பணிக்கணும். 3) விசுவாசத்துடன் அறிக்கை செய்து செயல்படவேண்டும். இப்போ வாங்க ஜெபிக்கலாம்.

இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார். யோவான் 11:40

### ஜெபம்

மகிமையான பரலோக தந்தையே, என்னுடைய விசுவாசத்தை வர்திக்கபண்ணும், பரிசுத்த ஆவியினவர் ஆளுகை செய்கிற இருதயமாக மாற்றும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்



gonnafly.hubpages.com/hub/bible-coloring-pages-NT

adapted from sweetpublishing.com CC BY-SA 3.0